

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.2.2025) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 120 கோடியே 54 இலட்சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், உள்விளையாட்டு அரங்கங்கள், கழிவறைத் தொகுதிகள், விடுதிக் கட்டடம் மற்றும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி. ஜெ.இன்னசன்ட் திவ்யா, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.2.2025) தலைமைச் செயலகத்தில், சென்னை சென்ட்ரல் பகுதியிலுள்ள மத்திய சதுக்க வளாகத்தில் சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனத்தின் சார்பில் தரைத்தளம் மற்றும் 27 அடுக்குமாடியுடன் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சென்ட்ரல் கோபுரக் கட்டடத்திற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண் ராய் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உயர்கல்வித் துறை சார்பில்

# ரூ.120.54 கோடி மதிப்பில் கல்விசார் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, பிப். 15 -**

**உயர்கல்வித் துறை சார்பில் ரூ.120.54 கோடி செலவில் கட்டப் பட்டுள்ள கல்விசார் கட்டடங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.2.2025) தலைமைச் செயலகத்தில், உயர் கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பல வகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகி யவற்றில் 120 கோடியே 54 இலட் சத்து 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்ட டங்கள், ஆய்வகக் கட்டடங்கள், உள்விளையாட்டு அரங்கங்கள், கழிவறைத் தொகுதிகள், விடுதிக் கட்டடம் மற்றும் அரசு கலை மற் றும் அறிவியல் கல்லூரிக்கான கட் டடங்கள் போன்ற பல்வேறு கட்ட டங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர் கல்வி நிறுவனங்களை தொடங்கு தல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில் நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உரு வாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண் டாம் வகுப்பு வரை படித்த மாணவி கள் உயர்கல்வி பயில "புதுமைப் பெண்" திட்டம் மற்றும் மாணவர் கள் உயர்கல்வி பயில "தமிழ்ப்பு தல்வன்" ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல் லூரிகள் மற்றும் பல்கலைக்கழ கங்களின் உட்கட்டமைப்பு வசதி களை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

கோயம்புத்தூர் மாவட்டம், புலி யகுளம் அரசு கலை மற்றும் அறி வியல் கல்லூரிக்கு 12 கோடியே 90 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய் செலவிலும், கரூர் மாவட்டம், தர கம்பட்டி அரசு கலை மற்றும் அறி வியல் கல்லூரி மற்றும் இராமேஸ் வரம் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி. ஜெ. அப்துல்கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தலா 12 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் கிருஷ் ணகிரி மாவட்டம், தளி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 14 கோடியே 74 இலட்சத்து 86 ஆயி ரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட் டுள்ள கல்லூரிகளுக்கான புதிய கல்விசார் கட்டடங்கள்;

சேலம் அரசு பொறியியல் கல் லூரியில் 8 கோடியே 65 இலட் சத்து 89 ஆயிரம் ரூபாய் செலவி லும், கோயம்புத்தூர் அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 54 இலட்சம் 86 ஆயிரம் ரூபாய் செலவிலும், திருச்சி ராப் பள்ளி அரசு பொறியியல் கல்லூரி யில் 8 கோடியே 56 இலட்சம் ரூபாய் செலவிலும், மற்றும் தஞ்சா வூர் அரசு பொறியியல் கல்லூரிக ளில் 8 கோடியே 59 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப் பட்டுள்ள உள்விளையாட்டு அரங் கங்கள்;

புதுக்கோட்டை, மா.மன்னர் கல்லூரியில் 6 கோடி ரூபாய் செல வில் கட்டப்பட்டுள்ள மின்னணு நூலகத்திற்கான கட்டடம்; திருச்சி ராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் காஜாமலை வளாகத் தில் 8 கோடியே 83 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ள மகளிர் விடுதிக் கட்டடம்;

மயிலாடுதுறை மாவட்டம், புத் தூர் ஸ்ரீனிவாசா சுப்பராயா பல வகை தொழில்நுட்பக் கல்லூரி யில் 4 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 9 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 5 ஆய்வகக் கட்டடங்கள்; பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் 4 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட் டுள்ள 8 கூடுதல் வகுப்பறைகள், கழிவறைத் தொகுதி மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்கள்;

தருமபுரி அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டாவது மற்றும் மூன்றாவது தளங்களில் 2 கோடியே 68 இலட் சம் ரூபாய் செலவில் கட்டப்பட் டுள்ள வகுப்பறை, ஆய்வகம் மற் றும் கழிவறை தொகுதிக்கான கட்டடங்கள்; மதுரை ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 வகுப் பறைகள் மற்றும் கழிவறைத் தொகுதிக் கட்டடங்கள்; தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி யில் 3 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கழிவறைத் தொகுதிகள்;

என மொத்தம் 120 கோடியே 54 இலட்சம் 17 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல் வித்துறை கட்டடங்களை முதல மைச்சர் அவர்கள் திறந்து வைத் தார்.

இந்த நிகழ்ச்சியில், உயர்கல் வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி. ஜெ.இன்னசன்ட் திவ்யா, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்த ரவல்லி மற்றும் அரசு உயர் அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

### எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம்! தமிழ்நாட்டு மக்களையும்

# மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் இறையாண்மையையும் அவமதிக்காதீர்!

## ஆளுநருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பதிலடி!

சென்னை, பிப்.15-

தமிழ்நாட்டிற்கு எது சிறந்தது என்று எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம் என்றும், தமிழ்நாட்டு மக்களையும், மக் களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அர சின் இறையாண்மையையும் அவமதிக் காதீர்கள் என்றும், ஆளுநருக்கு தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பதிலடி கொடுத்துள்ளார்.



இது குறித்து கழக அமைப்புச் செயலா ளர் ஆர்.எஸ். பாரதி அவர்களின் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு ஆளுநரின் கருத்துகள் அர சியல் சட்ட வரம்புகளை ஒவ்வொரு நாளும் மீறி வருகின்றன. அவரது சட்ட விரோத மற்றும் அரசியலமைப்பிற்கு எதி ரான நடவடிக்கைகள் தற்போது உச்சநீதி மன்றத்தில் கேள்விக்குள்ளாக்கப்பட்டு நீதிமன்றத்தால் எழுப்பப்பட்ட அவதானிப் புகள் மற்றும் கேள்விகள் அனைத்து செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் வெளியானது.

**கண்ணியமில்லாத ஆளுநர்!**

முதலமைச்சர் @mkstalin அவர்கள், தமிழ்நாடு ஆளுநரின் நடத்தை குறித்து இந்து ஆங்கில நாளிதழின் இன்றைய கட்டுரையை முன்னிலைப்படுத்தியதில் என்ன தவறு உள்ளது? முதலமைச்சர் தனது X தள ட்வீட் பதிவில் நீதிமன்ற நட வடிக்கைகள் எதையும் குறிப்பிடவில்லை. இருப்பினும் பதிலடி என்ற போர்வையில், பதவிக்காலம் முடிந்துவிட்ட நிலையில், வேறு பதவியை பெற நினைக்கும் கவர் னர், டில்லியில் உள்ள உயரதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க, தகாத செயல்களில் ஈடுபட்டு வருகிறார். அவரது ட்வீட் ஆளுந ராக அவரது கண்ணியம் இல்லாததை வெளிப்படுத்துகிறது. மேலும் அரசியலமைப்பு சட்டத்தால் வழங்கிய பதவியை அரசியல்மயமாக்கிக் கொண் டுள்ளார் என்பதை நிரூபிப்பதாக உள் ளது.

தி இந்து பத்திரிக்கையானது நன்மதிப்பை பெற்ற செய்தித்தாள். அதன் வர லாறு முழுக்க சுதந்திரமான மற்றும் அதீத நேர்மையை கடைப்பிடித்து ஒரு மைப்பாட்டினை காக்கும் வகையில் இருந்துவருகிறது. சாவர்க்கரையும் கோட்சேவையும் பின்பற்றுபவர்களுக்கு நேர்மை என்பது அந்நியமானதாக இருந் தாலும், மாநில ஆளுநர் பத்திரிகைகளை அவமதிக்கக் கூடாது என்பதைத்தான் பொதுமக்கள் எதிர்பார்ப்பர். கவர்னர் தனது ட்வீட்டில் எந்த ட்விட்டர் கணக்கு களை குறிப்பிட்டு இணைந்துள்ளார் என் பதை பார்க்கும் போது வேடிக்கையாக உள்ளது. ஒருவேளை அவர் அந்த தனிந பர்கள் மற்றும் செய்தி நிறுவனங்களின் ஆதரவை எதிர்பார்க்கிறாரா.? அவர் தமிழ்நாடு அரசின் அரசியல் எதிரியாக செயல்பட்டு ஆளுநர் மாளிகையை தவ றாகப் பயன்படுத்தவில்லையா?

**பா.ஜ.க.வால் நியமிக்கப்பட்ட ஏஜெண்ட்!**

அரசியல் பாதுகாப்பின்மை மற்றும் தமிழ்நாட்டு மக்களைப் புரிந்து கொள்வதை பற்றி ஆளுநர் பேசுகிறார். அரசியல் பற்றி வகுப்பெடுக்க இந்தியா வில் எங்காவது ஒரு இடத்தில் தேர்தலில் போட்டியிட்டுள்ளாரா ஆளுநர்? அவர் பா.ஜ.க.வால் நியமிக்கப் பட்ட வெறுப்பு நிறைந்த ஏஜெண்ட் மட்டுமே.

தமிழ்நாட்டு மக்களையும் தி.மு.க. வினையும் உண்மையிலேயே ஆளுநர் புரிந்து கொள்ள விரும்பினால் அவரது பதவியை ராஜினாமா செய்துவிட்டு வந்து அவரே தேர்ந்தெடுக்கும் ஏதாவதொரு சட் டமன்ற தொகுதியில் நின்று தேர்தலில் போட்டியிடுமாறு அழைக்கிறோம். நோட் டாவிற்கு கீழ் வாக்குகள் வாங்குவதையா வது தவிர்ப்பாரா என்று பார்ப்போம்.

**எங்களுக்குப் பாடம் நடத்த வேண்டாம்!**

கவர்னர் அவர்களே, ஆட்சியைப் பற்றி உங்களிடமிருந்து எங்களுக்கு எந்த விரிவுரைகளும் தேவையில்லை. இந்த மாநிலம் கல்வியில் #1 இடத்தில் உள்ளது. தொழில், வேலைவாய்ப்பு மற் றும் பிற நல்லாட்சி குறியீடுகளில் முன்ன ணியில் உள்ளது. நீங்கள் வருவதற்கு முன்பே நாங்கள் ஒரு செழிப்பான நிலையை அடைந்துள்ளோம். தமிழ் நாட்டிற்கு எது சிறந்தது என்று எங்களுக் குப் பாடம் நடத்த வேண்டாம். அதற்குப் பதிலாக அரசியலமைப்பு மற்றும் அதன் விழுமியங்களுக்கு மதிப்பளியுங்கள். மாறாக தமிழ்நாட்டு மக்களையும், மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் இறையாண்மையையும் அவமதிக்காதீர் கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலா ளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!



சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (15.02.2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, வில்லிவாக்கம், எம்.டி.எச் ரோடு டி.கே.ஏ.திருமண மகாலில் அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தொகுதி பொறுப்பாளர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: மக்கள் முதல்வரின் மனிதநேய விழா

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
**செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.**



காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரில் உள்ள வெங்கடேஷ்வரா பொறியியல் கல்லூரியில் நேற்று (14/02/2025) வெள்ளிக்கிழமை, இந்திய தர நிர்ணய அமைவனத்தின் (BIS சென்னை கிளை) ஒருங்கிணைப்பில் நடைபெற்ற உலகின் மிகப்பெரிய பி.ஐ.எஸ் முத்திரைப் பதிவு ஓவியத்தை படைக்கும் சாதனை நிகழ்வில் கலந்துகொண்டு தரம் மற்றும் பாதுகாப்பு குறித்த தமிழ் சித்திரக்கதை புத்தகத்தை வெளியிட்டு, திமுக துணைப் பொதுச்செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்புரையாற்றினார். உடன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான செல்வப்பெருந்தகை, பி.ஐ.எஸ் தென்னக துணை இயக்குநர் பிரவீன் கண்ணா, பி.ஐ.எஸ் தென்னக பிராந்திய அலுவலக தலைவர் மீனாட்சி கணேசன், சென்னை கிளை அலுவலக தலைவர் பவானி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் வெண்ணந்தூர் ஒன்றியம், மூலக்காடு முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும், அ.தி.மு.க. ஊராட்சி செயலாளருமான எம்.ஜி.ஆர். (எ) பழனியப்பன் தலைமையில் 60 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும்,நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் வெண்ணந்தூர் ஒன்றிய கழக செயலாளா ஆர்.எம்.துரைசாமி, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் விஜய பாஸ்கர், மாவட்ட மகளிர் அணி துணை தலைவர் மலர்விழி சம்பத், கிளை கழக செயலாளர்கள் கருணாநிதி, செல்வராஜ், கணபதி, வெங்கடேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.